# Indian Abacus™

BETS™
BRAIN EDUCATION
& TRAINING SKILLS



## அபாகஸ் கல்வியில் தொழில் வாய்ப்பு

## புதிய தலைமுறை அபாகஸ்

# இந்தியன் அபாகஸில் தொழில் வாய்ப்பு

தொழில் ஆர்வம் மிக்கவர்களுக்கு இந்தியன் அபாகஸ் நிறுவனம் ஒரு மிக நல்லதொரு வாய்ப்பினை வழங்குகிறது. சிறிய தொழிலை ஆரம்பித்து படிப்படியாக உழைப்பினால் உயர விரும்புகிறவர்களுக்கான வணிக வாய்ப்பினை வழங்குகிறது. பெரிய அளவில் வாழ்க்கையில் தொழில் சாதிக்க வேண்டும் என கனவு காண்பவர்களுக்கு இது வரப்பிரசாதமாகும்.

குழந்தைகளுக்கான கல்வித்துறையில் சேவை செய்ய ஒரு மகத்தான வாய்ப்பாகும். இத்தகைய அரிய வாய்ப்பு தற்போது தங்களுக்காக காத்திருக்கும்போதே பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




# குழந்தைகளுக்கான வயது வரம்பு

5 முதல் 13 வயதுக்குட்பட்ட மாணவர்கள் மிகச்சிறந்த கல்வி அனுபவத்தைப் பெற இந்தியன் அபாகஸ் திட்டம் வழிவகுக்கிறது. மிக துல்லியத்துடனும் வேகத்துடனும் மனக்கணக்கிட்டு தங்கள் மூளைத்திறனை மேலும் வளர்த்துக்கொள்ள குழந்தைகள் பயிற்றுவிக்கப்படுவர். ஒரு முகத்துடன் கவனிக்கும் திறன், மனக்காட்சி உருவகத்திறன், தீர்க்கமாக கேட்கும் திறன் முதலிய பல திறன்களை அவர்கள் வளர்த்துக்கொள்வர்.

# இந்தியன் அபாகஸின் தனிச்சிறப்பு

அபாகஸ் கல்வி முறை அபார வளர்ச்சிபெற்று வருகிறது. தரமான கல்வியாளர்களும் / திட்டங்களும் இல்லாததினால் அபாகஸ் கல்வி முன்னேற்றம் தரம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இந்தியன் அபாகஸ் முயற்சியால் இந்த நிச்சயமற்ற தன்மை மாறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்தியன் அபாகஸின் கண்டுபிடிப்பான இந்தியன் அபாகஸ் கருவியானது கற்பதற்கு புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தி, அபாகஸ் கல்வியின் தரத்தை உன்னத நிலைக்கு உயர்த்தும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.



புதிய தலைமுறை அபாகஸ்



# இந்தியன் அபாகஸின் Franchise கிளைகள்:

இந்தியன் அபாகஸ் பயிற்சி திட்டம் கிளைகள் (Franchise) செயல்பாட்டில் மிகுந்த திறனுடன் செயல்படும். சிறுதொழில் ஆர்வலர்களின் கனவுகளையும் விருப்பத்தையும் நிறைவேற்றக்கூடிய கல்வி சேவைத்திட்டம் இது என்பதை எங்களது 13 வருட அனுபவத்தினால் அறிகிறோம்.

குறைந்த முதலீட்டில், அதிக வருவாய் ஈட்டி தரக்கூடியதுமான இத்திட்டம், நிரந்தர வருமானத்தை அளிக்கின்றது. அத்தகைய அவா உள்ள முதலீட்டாளர்கள் இந்தியன் அபாகஸ் வழங்கும் இக்கல்வி திட்டத்தில் தங்களை இணைத்துக்கொண்டால் மிகுந்த பயனடைவர்.


எங்களது கிளைகள் (Franchise) திட்டத்தில் இணைந்து ஆயிரக்கணக்கானவர்கள் கிளைகள் நிறுவ ஆர்வம் காட்டியுள்ளனர். இது மிகைப்படுத்தப்படாத உண்மை நிலை.



# பயிற்சி நிலையங்கள் & மின் வழிகற்றல்

தரமான பயிற்றுவிப்பாளர்களோடு சிறந்த பயிற்சி அளிக்கக்கூடிய சிறப்பு எங்களது Franchise கிளைகளில் உண்டு. இதைத்தவிர, இணையத்தில் மின்வழி அபாகஸ் கல்வி கற்க ஏதுவாக எங்களது இணையதளத்திலும் வழி உண்டு. மிகச்சிறந்த மென்பொருள் வன்பொருள் உபயோகித்து, மாணவர்கள் எளிதாகவும், திறமையாகவும் பாடம் கற்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு இது ஒரு புதிய அனுபவமாக திகழும்.





## மையத்தின் செயல்பாடுகள் மற்றும் திட்டத்தை சந்தைப்படுத்துதல்

இந்தியன் அபாகஸ் திட்டத்தை சந்தைப்படுத்துதலின் அடிப்படை, அபாகஸ் பயிற்சி கல்வித்திட்டம் பற்றிய விழிப்புணர்வினை பெற்றோர்களுக்கு ஏற்படுத்துவதாகும். கீழ்கண்ட வகையில் செயல்படுத்தலாம்.

1. முக்கிய தகவல்களை அறிவிக்கும் வண்ணம் பெயர் பலகையை வைப்பது (பொது வடிவமைப்பைப் பெற்றுக் கொள்ளலாம்).
2. திட்டம் குறித்த தகவல்கள் மற்றும் உள் கட்டமைப்பு குறித்த விவரங்களை கொண்டுள்ள பதாகைகளை வைப்பது.
3. சமூக சேவையின்போது, பார்வையாளர்களுக்கும் அங்குள்ள பெற்றோர்களுக்கும் விளங்கும் வண்ணம் விளக்கக் காட்சிகள் செய்யலாம்.
4. குழந்தைகள் கணித திறமையை பறைசாற்றும் வண்ணம் நேரடி நிகழ்ச்சிகளை Live Demo அமைக்கலாம்.
5. மிகமுக்கியமாக பள்ளிகளை அணுகி இத்திட்டம் பற்றி விளக்க வேண்டும்.

திட்டத்தை சந்தைப்படுத்துதலின் அடிப்படையே இத்தகைய கல்வித் திட்டத்தைக் குறித்து பெற்றோர் களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த, தங்கள் குழந்தைகளுக்கு இதனால் என்ன பயன் என சிந்திக்க வைப்பதுதான். பெற்றோர் இதன் பயனை உணர்ந்து, தங்கள் குழந்தைகளின் திறனை இது வளக்கும் என தெரிந்தால் இத்திட்டத்தில் சேர்க்க தயங்கமாட்டார்கள்.



## அபாகஸ் பயிற்சியாளர்கள்

கற்பிக்கும் ஆசிரியர்கள் கீழ்கண்ட தன்மை உடையவராக இருக்க வேண்டும்.

1. அளவிலாத பொறுமையும், குழந்தைகளுடன் அன்புடன் பழகுபவராக இருத்தல் வேண்டும்.
2. ஆசிரியர் பணியின் மகத்துவம் அறிந்தவராக இருத்தல் வேண்டும். அப்பணியின் உன்னத நோக்கத்தை புரிந்துகொண்டவராக இருக்க வேண்டும்.
3. கல்வித்திட்டத்திற்கேற்ற திறனும் பாட அறிவும் உடையவராக இருக்க வேண்டும்.
4. பிறர்க்கு கற்பித்தலும் தான் கற்றலும் மிகமுக்கியமானதாக கருதும் பொறுப்பு மிக்கவராக இருக்க வேண்டும்.
5. கற்றலில் பின்தங்கிய குழந்தைகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கவும் அவர்களை ஊக்குவித்து மேலும் அவர்களது செயல்திறனை முன்னேற்றும்படியான மேலாண்மை தகுதியும் இருக்கவேண்டும்.

பயிற்சியாளர் ஒரு பட்டதாரியாக இருப்பது நலம். நல்ல தகவல் தொடர்பு திறனும் பேச்சுத் திறனும் இருத்தல் அவசியம். கற்பித்தலுக்கு இதுவே அடிப்படை.

கிளை Franchise ஒப்பந்தம் முடிந்தபிறகு, பயிற்சியாளர் பயிற்சி திட்டத்தின் கீழ் உரிய கட்டணத்துடன், இந்தியன் அபாகஸின் தலைமை பயிற்சியாளர் குழுவினர் பயிற்றுவிப்பாளர் பயிற்சியினை நடத்துவர். இந்த பயிற்றுவிப்பாளர் பயிற்சி பல நிலைகள் உடையது. முதல் அடிப்படை நிலை (Starters) 3 தினத்தில் கற்கும்படி அமைந்துள்ளது. 4-ஆம் நிலைக்கு (Racers) மட்டும் ஒருநாள்முழுவதுமாக திட்டப்பயிற்சி அமைக்கப்பட்டுள்ளது. மற்ற நிலைகளுக்கு ஒரு நாளைக்கு இண்டு நிலைகள் பயிற்சி அளிக்கப்படும்.

அபாகஸ் பயிற்சியாளர் முதலில் அடிப்படை பயிற்றுவிப்பாளர் பயிற்சி எடுத்துக் கொள்வார். பிறகு 2 மாதம் மாணவர்களை மையங்களில் பயிற்றுவிக்க வேண்டும். பிறகு ஆசிரியர் பயிற்சியின் 2-ஆம் மற்றும் 3-ஆம் நிலைகளுக்கு தலைமை அலுவலகத்தில் பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

பின்பு அதற்குரிய மாணவர்களுக்கு பயிற்சி அளித்தபின் ஆசிரியர் பயிற்சியின் 4-ஆம் நிலைக்கு (Racers) தகுதி பெறுவார். மூன்றாம் நிலையில் மாணவர்களுக்கு பாடம்/பயிற்சி நடத்தும்போது குறைந்தபட்சம் 8 வகுப்புகளாவது எடுத்து இருக்க வேண்டும்.




## பயிற்றுவிப்பாளருக்கு பயிற்சி அளிப்பாதற்கான கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| A-மையம் - முதல் 3 வருட ஒப்பந்தம் | Rs. 20,000 | ஒவ்வொரு 3 வருடம் புதுப்பித்தல் | Rs. 10,000 |
| B-மையம் - முதல் 3 வருட ஒப்பந்தம் | Rs. 15,000 | ஒவ்வொரு 3 வருடம் புதுப்பித்தல் | Rs. 7,500 |
| C-மையம் - முதல் 3 வருட ஒப்பந்தம் | Rs. 10,000 | ஒவ்வொரு 3 வருடம் புதுப்பித்தல் | Rs. 5,000 |

*Service tax as Applicable

## பயிற்சி மையம் (Franchise) தொடங்குவதற்கான கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| A-மையம் - முதல் 3 வருட ஒப்பந்தம் | Rs. 1,00,000 | ஒவ்வொரு 3 வருடம் புதுப்பித்தல் | Rs. 50,000 |
| B-மையம் - முதல் 3 வருட ஒப்பந்தம் | Rs. 50,000 | ஒவ்வொரு 3 வருடம் புதுப்பித்தல் | Rs. 25,000 |
| C-மையம் - முதல் 3 வருட ஒப்பந்தம் | Rs. 35,000 | ஒவ்வொரு 3 வருடம் புதுப்பித்தல் | Rs. 17,500 |

*Service tax as Applicable

### மாணவர்களுக்குபயிற்சி அளித்ததற்கான கட்டணத்தில் பங்கு

| | மாணவர் கட்டணம் | Franchisee | பயிற்சியாளர் | நிறுவனத்திற்கு |
|---|---|---|---|---|
| A-மையம் - ஒரு நிலை 3 மாதம் | Rs. 1800 | Rs. 1035 | Rs. 390 | Rs. 375 |
| B-மையம் - ஒரு நிலை 3 மாதம் | Rs. 1350 | Rs. 750 | Rs. 300 | Rs. 300 |
| C-மையம் - ஒரு நிலை 3 மாதம் | Rs. 900 | Rs. 540 | Rs. 180 | Rs. 180 |

| | மாணவர் கட்டணம் | Franchisee | நிறுவனத்திற்கு |
|---|---|---|---|
| A & B மையம் - ஆரம்ப பதிவு கட்டணம் மற்றும் பயிற்சிக்கான அபாகஸ்,புத்தகம் மற்றும் இதர தொகுப்பு | Rs. 1100 | Rs. 75 | Rs. 1025 |
| C மையம் -ஆரம்ப பதிவு கட்டணம் மற்றும் பயிற்சிக்கான அபாகஸ்,புத்தகம் மற்றும் இதர தொகுப்பு | Rs. 650 | Rs. 25 | Rs. 625 |

## இந்தியன் அபாகஸ் - பள்ளி மையங்கள்

இந்தியன் அபாகஸ் கல்வி பயிற்சி திட்டம் பள்ளிகளிலும் ஒரு தேவையை ஏற்படுத்தப் போகிறது என்றால் மிகை ஆகாது. பள்ளியில் இந்தியன் அபாகஸ் திட்டத்தை செயல்படுத்தினால் மாணவ/மாணவிகள் பயன்பெறுவர் என்பதை Franchisee மையத்தினரும் புரிந்துகொண்டுள்ளனர். தங்களது மையத்துடன் பள்ளிகளில் அமைந்துள்ள அபாகஸ் மையத்தினையும் ஒருசேர நிர்வகிப்பதால் பலன் அதிகம். பல்வேறு பள்ளிகள் (State, Matriculation, CBSE) அபாகஸ் பயிற்சி திட்டத்தை தங்கள் பள்ளிகளில் கொண்டுவர மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.





## Franchisee மாதிரி வணிகத்தின் நோக்கம்

Franchisee கிளை சார்ந்த வணிக திட்டம் கடந்த 20 ஆண்டுகளாகதான் இந்தியாவில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இதனால் சிறு வணிகர்களும், தொழிலதிபர்களும் பெரிதும் பயனடைந்துள்ளனர். சந்தையில் மதிப்புமிக்க நிறுவனத்தின் Franchisee மையம் அந்நிறுவனத்தின் நற்பெயரின் நன்மையை அனுபவிக்கின்றது. அதே சமயம் அந்நிறுவனத்தின் சார்பில் பல்வேறு தரமான சேவைகள் மக்களுக்கு அளிக்கக்கூடிய வாய்ப்பும் பெறுகிறது. இதன் மூலம் மக்கள் செலுத்தும் பணத்தில் ஒரு பங்கினை தனது சேவையினால் Franchisee மையம் கூடுதலாக பெறுகிறது.

இந்தியன் அபாகஸ் முகவர் Franchise ஆகும் வாய்ப்பு பலவித நன்மைகளைக் கொண்டது. ஒரு புகழ்மிக்க உலகளாவிய நிறுவனத்தின் சார்பில் அபாகஸ் கல்வி சேவை அளிப்பது மட்டுமல்லாமல், நல்ல வருமானம் ஈட்டவும் வழிவகுக்கும்.

Franchisee ஒப்பந்தத்தின்படி அந்நகரிலோ ஊரிலோ ஒரு பகுதி ஒதுக்கப்படும். அப்பகுதியில் இந்தியன் அபாகஸ் நிறுவனத்தின் சார்பாக அக்கிளை/மையம் செயல்படும். சந்தையின் முக்கியத்துவத்தைப் பொறுத்து மற்றும் சேவையின் தேவையைப் பொறுத்து இரு கிளைகளுக்குள்ள தூரம் நிர்ணயிக்கப்படும். முன்னர்போல் அல்லாமல் அபாகஸ் திட்டத்தின் வரவேற்பு பன்மடங்கு பெருகிவிட்டதால் அதற்குரிய தேவையும் வளர்ந்துள்ளது. Franchisee கிளை தழைத்து வளர இத்தகைய தேவை ஊக்கமளிக்கிறது.



### ஒரு Franchisee கிளை மூலம் எவ்வளவு வருமானம் ஈட்டலாம்?

| மாணவர் சேர்க்கை | செலவுகளுக்குப் பிறகு மாத நிகர வருமானம் |
|---|---|
| 100 ( 6 வகுப்புகள் - ஏறத்தாழ) | Rs. 17,500 |
| 150 (10 வகுப்புகள் - ஏறத்தாழ) | Rs. 27,500 |
| 200 (16 வகுப்புகள் - ஏறத்தாழ) | Rs. 35,000 |

## மேலும் பல நன்மைகள்



தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் Franchisee கிளை துவங்குவதோடு மட்டுமல்லாமல் அப்பகுதியிலேயே மேலும் கிளைகள் (Extention centre) துவக்க (அதற்கான பணம் செலுத்தி) வாய்ப்புகள் நிபந்தனையின் பெயரில் அளிக்கப்படும். இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட கிளைகள் உள்ள Franchisee அப்பகுதியின் அபாகஸ் கல்வி தேவையை முழுவதுமாக தீர்க்க முடியும். ஒரு மையம் மற்றும் 2 விரிவு கிளைகள் (Extention centre) ஏறத்தாழ 400முதல் 500 மாணவர்களுக்கு அபாகஸ் பயிற்சி தர முடியும்.

யார் எமது **Franchisee** ஆகலாம்?

கீழ்கண்ட தகுதிகள் உடைய எவருமே எமது வெற்றிகரமன Franchisee ஆகலாம்.

1. வேலைத்திறனும் பொறுப்புணர்வுடன் முன்னேறும் உந்துதல் வேண்டும்.
2. அயராது உழைக்கும் தன்மை உடையோர்.
3. லாபகரமாக பணம் ஈட்டக்கூடிய அவா கொண்டிருக்க வேண்டும்.
4. இத்தகைய திட்டத்திற்கும் Franchisee கிளை நடத்துவதற்குரிய நேரம் மற்றும் பணம் ஒதுக்க வேண்டும்.
5. ஒரு குழுவாக பணியாற்றும் தன்மை வேண்டும்.
6. வெற்றி பெற்றவரை முன்மாதிரியாக கொண்டு செயல்பட தெரிந்திருக்க வேண்டும்.
7. மனித நேயத்துடனும் உறுதியுடனும் செயல்பட தெரிந்திருக்க வேண்டும்.

**உள் கட்டமைப்பு**

Franchisee மையங்கள், குழந்தைகள் இந்தியன் அபாகஸ் கல்வி கற்கும் வகையில் அமைந்து இருக்க வேண்டும்.

இந்தியன் அபாகஸ் கல்வி மையங்களில்:

1. தனி வகுப்பறைகள்
2. அலுவலக நிர்வாகத்திற்கு தேவையான கணினி, (Optional) தொலைபேசி, கைப்பேசி மற்றும் மாணவர்களுக்கான மேஜை, நாற்காலிகள் இருக்க வேண்டும்.
3. நிர்வாக பகுதியில் பொருள்களை தனியாக வைக்கும் பகுதி, பெற்றோர் அமரும் இடம், கழிப்பறைகள், வாகனம் நிறுத்தும் இடம் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.


Franchisee மையங்களில் உள்ள வகுப்பறைகள் நன்கு வெளிச்சத்துடனும் காற்றோட்டத்துடனும் இருக்க வேண்டும். இத்தகைய அடிப்படை வசதிகளில் குறைவு ஏற்படக்கூடாது. ஒரு நல்ல Franchisee மையம் வசதியான உள்கட்டமைப்பு, பயிற்றுவிக்கப்பட்ட சிறந்த பயிற்சியாளர் குழு, தேவையான பொருள்கள் கொண்ட அலுவலகம் மற்றும் சிறந்த நிர்வாகத்திறன் கொண்டிருக்க வேண்டும். குழந்தைகள் மகிழ்ச்சியுடன் அபாகஸ் கல்வி பயில உகந்த சூழ்நிலை உடையதாக இருக்க வேண்டும்.

## பயிற்றுவிப்பாளருக்கான இந்தியன் அபாகஸ் - டிஜிட்டல்

பயிற்றுவிப்பாளருக்கான இந்தியன் அபாகஸ் - டிஜிட்டல் கருவி பயிற்சியாளர் குழந்தைகளுக்கு கற்பிக்கும்போது உபயோகிக்க வடிவமைக்கப்பட்டது. இக்கருவியை கொண்டு பயிற்சியாளர் மாணவர்கள் தங்களது எண் திறன்கள்,மற்றும் கவணிக்கும்/கேட்கும் திறன்கள் வளர்த்துக்கொள்ள பயிற்சி அளிக்கப்படுகின்றது.

### டிஜிட்டல்

## LCD மற்றும் LED திரைகள்



டிஜிட்டல் மின்திரை ஆசிரியர்க்கான இந்தியன் அபாகஸ் - டிஜிட்டல் மிக முக்கிய பாகம் ஆகும். Slider கள் நகர்த்தும் போது திரையில் LEDல் எண்கள் தோன்றுவதும் மறைவதுமாக அமைக்கப்பட்டுள்ளது.

## திறன்பட கற்பிக்கலாம்

பயிற்றுவிப்பாளருக்கான இந்தியன் அபாகஸ் - டிஜிட்டல் கருவி பாரம்பரிய பயிற்றுவிப்பாளருக்கான கருவியைவிட உயர்ந்தது. Slider களை நகர்த்துவதால் ஏற்படும் பிரகாசமான வண்ண காட்சிகள் மனதில் பதிய அதிக வாய்ப்புண்டு. செய்முறையின்போதே திரையில் காட்சிகள் ஒவ்வொரு நிலைக்கு தோன்றுவதால் கற்பிக்கும் பயிற்சியாளருக்கும் பயிலும் மாணவர்க்கும் தெளிவாக இருக்கும்.

## வாய்வழி கணக்குகள் மற்றும் தொலைதூர கட்டுப்பாடு (Remote Control)

பயிற்றுவிப்பாளருக்கான இந்தியன் அபாகஸ் - டிஜிட்டல் கருவி கற்பித்தல் மற்றும் மாதிரி தேர்வுக்கான தேவைகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனுள் பொதிந்து இருக்கும் MP3 Player வாயிலாக ஒலிப்பெருக்கி மூலம் அனைத்து மாணவர்களுக்கும் கேட்கும் வண்ணம் கேள்விகள் Oral Sums பயிற்சி அளிக்கப்படும். மாணவர்கள் பதில் அளித்தபின் சரிபார்த்துக் கொள்ளும் வசதி, காலக்கெடு வைத்து தேர்வு தேர்வுக்கான நேரத்தை நிர்ணயம் செய்ய முதலிய பல சிறப்பு அம்சங்கள் இதில் உண்டு. ஒரு இடத்தில் இருந்தவாறே அனைத்து மாணவர்களையும் கண்காணித்து ஒரு ஆசிரியரால் வகுப்பறையை நடத்திச் செல்ல முடியும்.


BETS™
BRAIN EDUCATION & TRAINING SKILLS

**Indian Abacus Pvt. Ltd.,**

**Corporate Office:** No. A1-1857, 13th Main Road, 6th Avenue, Anna Nagar West, Chennai - 600 040, Tamilnadu, India.Tel : +91 - 44 - 2618 2577 / 4577, Mob: 7200 227 227, Fax : +91 - 44 - 2618 1706 / 0143.
Email : admin@indianabacus.com
Web : www.indianabacus.com

**Regional off:** No.685, 11th Main, 2nd Block, Rajaji Nagar, Bangalore - 560 010, Karnataka.
Tel : 080 - 2332 8844
www.indianabacus.in